**Dated : 11.09.2024**

**O.S.No. 54/2018**

**PW1. - திருமதி. மகேஸ்வரி, க/பெ. வெங்கடசாமி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

என் தாயார் காந்தம்மாளுக்கும், சுப்பிரமணிக்கும் திருமணம் நடந்த தேதி, விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த இடத்தில் திருமணம் நடந்தது, திருமண அழைப்பிதழ் அடிக்கப்பட்டதா என்றால் ஆம். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது கல்யாண பத்திரிக்கை தற்போது இல்லை என்றார். திருமணம் எங்கு நடந்தது என்றால் குந்தப்பள்ளியில் கோவிலில் நடந்தது, எந்த கோவில் என்றால் ஞாபகமில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், உண்மையிலேயே அவர்களுக்கு திருமணம் நடக்கவில்லை என்றும், திருமண பத்திரிக்கை ஏதும் அடிக்கவில்லை என்றும், உண்மையிலேயே திருமணம் நடந்திருந்தால் அதுகுறித்து ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் சொந்த ஊர் புலியஞ்சேரி என்றால் சரிதான். புலியஞ்சேரியில் சுப்பிரமணி என்ற பெயரில் பலர் உள்ளனர் என்றால் சரிதான். என் தந்தைக்கு என்ன மாதிரி உடல் நல பிரச்சனை இருந்தது, எதற்காக சிகிச்சை எடுத்துக்கொண்டார், எதனால் இறந்தார் என்றால் ஹார்ட் அட்டாக் என சொன்னார்கள். அவர் எந்தெந்த மருத்துவமனைகளில் எப்போது சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பாவுடன் நானும், என் அம்மாவும் சேர்ந்து இருந்தோமா என்றால் இருந்தோம். எங்களுக்கு குடும்ப அட்டை இருந்ததா என்றால் இல்லை. எந்த வருடம் வரை நான் என் அப்பாவுடன் இருந்தேன் என்றால் 1994ம் ஆண்டு வரை அதாவது எனக்கு திருமணம் ஆகும் வரை இருந்தேன். திருமணம் ஆகும் வரை என் அப்பாவுடன் நான் வசித்திருந்தால், எங்களுக்கு ரேஷன் கார்ட் இருந்திருக்கும், என் அப்பாவின் ரேஷன் கார்டில் என் பெயர் இருந்திருக்கும் என்றால் சரியல்ல, ரேஷன் கார்ட் கிடையாது. நானோ, என் அம்மாவோ நான் சொன்ன மாதிரி சுப்பிரமணியுடன் ஒரே வீட்டில் எப்போதும் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. சுப்பிரமணிக்கு என்னென்ன சொத்துக்கள், எங்கெங்கு இருந்தது என தெரியுமா என்றால் தெரியும், என் தாத்தா வழி மூதாதையர் சொத்துக்கள். சுப்பிரமணி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஏற்கனவே விற்றிருக்கிறார் என்றால் சரிதான். சுப்பிரமணி கிரயம் கொடுத்த சொத்துக்களையும், இன்னும் சில விற்காத சொத்துக்களையும் இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

குந்தப்பள்ளி கிராமத்தில் தியாகராஜன் வீட்டிற்கு அருகில் ஒரு வீட்டுமனை உள்ளது என்றும், அதை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால், என் அப்பா உயிருடன் இருக்கும் போதே விற்றுவிட்டார், நீதிமன்றம் யாருக்கு விற்றார் என கேட்ட போது, தன் அண்ணன் தியாகராஜனுக்கு என சாட்சி சொன்னார். உடன் பிறந்த அண்ணனா என்றால் இல்லை பெரியப்பா மகன். இவ்வழக்கில் சரஸ்வதி, வேலன் ஆகியோருக்கு என் அப்பா சொத்து விற்றிருப்பது செல்லாது என சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஒரு நபருக்கு விற்றது சரி என்று விட்டுவிட்ட நான் மற்ற இருவருக்கு விற்றதை தவறு என கட்சி செய்வது ஏன் என்றால் அது ஒரு குடும்பத்திற்குள் அண்ணன், தம்பி வாரிசுகளுக்கிடையே கொடுத்திருப்பதால் அதை சரியல்ல என நான் கட்சி செய்யவில்லை, ஆனால் இவர்கள் 3ம் நபர்கள். குந்தப்பள்ளி கிராமத்திலேயே சர்வே எண்.43/1சி, 44/2சி, 44/3ஏ ஆகிய சொத்துக்களையும் இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் அவற்றில் சித்தப்பா இருந்து வருகிறார். அண்ணன் தம்பிக்குள் வாங்கியிருப்பதால் நான் அதனை சேர்க்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும், சுப்பிரமணிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் முழுவதும் எவை எவை என எனக்கு உண்மையிலேயே தெரியாது என்றால் சரியல்ல. சுப்பிரமணியின் சொத்துக்கள் பற்றி முழுமையாக தெரிந்திருந்தால் அவற்றை தாவாவில் சேர்த்திருப்பேன் என்றும், அவ்வாறு சேர்க்காததால் சுப்பிரமணியின் சொத்துக்கள் பற்றி எனக்கு முழுவதுமாக தெரியவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா எப்போது இறந்தார் என்றால் 1995ல் இறந்தார். என் அம்மா இறக்கும் போது அவருக்கு 60 வயது என்றால் சரிதான். நான் என் அப்பா என சொல்லும் சுப்பிரமணி 04.06.2017 அன்று இறந்துள்ளார் என்றால் சரிதான், அவர் இறக்கும் போது அவருக்கு 64 வயது என்றால் சரியல்ல, பொய். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4ல் இறப்பு சான்றில் அவ்வாறு கண்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.15 ஆவணங்களின் பெயரில் பார்த்தாலும், என் தந்தையை விட தாயார் 18 வயது பெரியவர் என்றால் சரியல்ல, நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது, தன் தாயார் தன் தந்தைக்கு இளையவர் என்றார். அப்படி என்றால் வா.சா.ஆ.4 அல்லது வா.சா.ஆ.15 தவறா என்றால் வா.சா.ஆ.4ல் கண்டுள்ள என் அப்பாவின் வயது தவறு. என் அம்மாவின் இறப்பு சான்று எப்போது வாங்கினேன் என்றால் என் அம்மா இறந்த போதே வாங்கிவிட்டேன். இவ்வழக்கை தாக்கல் செய்யும் போது வா.சா.ஆ.15 இறப்பு சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆன என் அம்மாவின் இறப்பு சான்றை வழக்கிற்காக தயாரித்துள்ளேன் என்றும், அதனால் தான் வழக்கு தாக்கல் செய்யும் போது வா.சா.ஆ.15 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பள்ளி மாற்று சான்றிதழ்

வா.சா.ஆ.16ல் பாதுகாவலர் என்பதற்கு நேராக சுப்பிரமணியம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தேன்மொழியின் கணவர் சுப்பிரமணி என்றும், வா.சா.ஆ.16ல் உள்ள சுப்பிரமணியம் இவர் இல்லை என்றால் சரியல்ல. என்னை யார் பள்ளிக்கூடத்தில் கொண்டு வந்து சேர்த்தது என்றால் என் அப்பா சுப்பிரமணி தான் சேர்த்தார். பள்ளியில் சேர்க்கும் போது சேர்ப்பவர் கையொப்பமிடுவார் என்றால் சரிதான். அதுபோன்ற ஆவணங்களை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா, பள்ளியில் என்னை சுப்பிரமணி சேர்த்தது குறித்து யாரையாவது விசாரிக்க முடியுமா என்றால் சாட்சி மௌனமாக இருந்தார். சுப்பிரமணி தான் என்னை கொண்டு சென்று பள்ளியில் சேர்த்தார் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், சுப்பிரமணி என் அப்பா இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.17 திருமண அழைப்பிதழும் இவ்வழக்கிற்காக நான் அச்சடித்து தயாரித்துக்கொண்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 திருமண அழைப்பிதழ் எப்போது அச்சிடப்பட்டது என விவரம் அதில் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.17 உண்மையிலேயே என் திருமண பத்திரிக்கை தான். சுப்பிரமணி என் அப்பா என சொல்லும் நிலையில் நான் சுப்பிரமணியின் வாரிசு சான்றை வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை, அவர்கள் தான் வாங்கியிருக்கிறார்கள். வருவாய் துறை அதிகாரிகள் வாரிசு சான்றை விசாரித்தே கொடுப்பார்கள் என்றால் விசாரிக்கவில்லை. அவர்கள் விசாரிக்காமல் வாரிசு சான்று கொடுத்ததாக சொல்லும் நிலையில் என்னை வாரிசாக சேர்க்க வேண்டும் என்னை விசாரிக்கவில்லை என்று ஆட்சேபனை ஏதும் தாசில்தாரிடம் முறையிட்டேனா என்றால் இல்லை. நான் சுப்பிரமணிக்கு வாரிசு இல்லை என்பதால் வாரிசு சான்று கோரி விண்ணப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் அனுபவத்தில் நாங்கள் எப்போதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். தற்போது இல்லை. எதுவரை அவ்வாறு அனுபவித்து வந்தோம் என்றால் என் அம்மா இறக்குவரை அனுபவித்தோம். குறிப்பாக எந்த ஆண்டு என்றால் 1994 வரை. தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவித்ததற்கு ஆதரவாக கந்தாய ரசீது, வீட்டு வரி ரசீது போன்ற ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. 1994 வரை தாவா சொத்துக்களை அனுபவித்து வந்ததாக சொல்வது பொய் என்றும், அவ்வாறு இருந்தால் அதுகுறித்த வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1994க்கு பிறகு பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போதும் தேன்மொழி போன்ற பிரதிவாதிகள் தற்போது தாவா சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்றார். தாவா சொத்துக்களை தற்போது யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் நானே தான் அனுபவித்து வருகிறேன். நான் கந்தாயம்

போன்ற சொத்து வரியினை செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. வீட்டு வரி யார் செலுத்தி வருகிறார், மின்கட்டணம் யார் கட்டி வருகிறார் என்றால் அவர்கள் தான் மின்கட்டணம் கட்டுகிறார்கள். தாவா சொத்துக்களை நான் அனுபவித்து வருகிறேன் என சொல்லும் நிலையில் எங்கெங்கு எந்தெந்த சொத்துக்களில் என்ன என்ன பயிர் செய்துள்ளேன் என்றால் புலியஞ்சேரியில் தென்னந்தோப்பு, மாந்தோப்பு உள்ளது. குந்தப்பள்ளியில் உள்ள என் அப்பா கிரயம் கொடுத்த சொத்துக்களில் என்ன பயிர் செய்துள்ளார்கள் என தெரியாது. குந்தப்பள்ளியில் உள்ள கிரயம் கொடுக்காத சொத்துக்களில் என்ன பயிர் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. நான் சொல்வது பொய் என்றும், நான் எந்த தாவா சொத்தையும், எப்போதும் அனுபவிக்கவில்லை என்றும், என்ன சொத்துக்கள் இருக்கிறது என்பதே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சர்வே எண். 13/4சி–ல் உள்ள சொத்து சுப்பிரமணிக்கு அவரது தகப்பனார் தானமாக 1979ல் கொடுத்தது என்றும், அது அவருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதில் யாரும் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. சுப்பிரமணிக்கு 1ம் பிரதிவாதி தேன்மொழியுடன் தான் திருமணம் நடந்தது என்றும், சுப்பிரமணி இறக்கும் வரையில் தேன்மொழி மற்றும் அவர்களது குழந்தைகளுடன் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. சுப்பிரமணிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடக்கவில்லை. நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது சாட்சிக்கு 1994ல் திருமணம் ஆன பிறகு சாட்சி தன் அப்பா என சொல்லும் சுப்பிரமணி 2017ல் இறக்கும் வரை அவருடன் யார் இருந்தார்கள் என்றால் தன் சித்தி தேன்மொழி இருந்தார் என்றும், ஆனால் அவர்கள் திருமணம் செய்துகொள்ளவில்லை என்றும் சொன்னார், சுப்பிரமணி முறையாக தேன்மொழியை 06.09.1978ல் திருமணம் செய்து கொண்டார்ள ன்றும், 2ம் பிரதிவாதி மணிமேகலை 1980லும்,3 ம் பிரதிவாதி சுமதி 1983லும், 4ம் பிரதிவாதி புனிதா 1988லும், 5ம் பிரதிவாதி தினேஷ்குமார் 1995லும் பிறந்தார்கள்என்றால் பொய். அவருடைய சரியான வயது கூட எனக்கு தெரியாது என்றும், பிரதிவாதிகளின் வயதை நான் குறைத்து வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணிக்கு பாத்தியப்படாத சொத்தையும் தாவா சொத்தாக தவறாக காட்டியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 1994ல் எனக்கு திருமணம் நடந்துள்ள போதும், 2017ல் சுப்பிரமணி இறக்கும் வரை அவரிடம் வந்து நான் சொத்தில் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டேன். எப்போது அவ்வாறு கேட்டேன் என்றால் இறப்பதற்கு முன்னர் கேட்டேன். திடீரென அவர் இறந்துவிட்டார். நான் எப்போதும் சுப்பிரமணியுடன் இருந்ததில்லை என்றும், அவரிடம் பாகம் கேட்டதில்லை என்றும் சொன்னால் பொய். சுப்பிரமணி என்ற பெயரில் பலர் என் ஊரில் இருக்கிறார்கள் என்றும், சுப்பிரமணி என்ற பெயரை பயன்படுத்திக்கொண்டு 1ம் பிரதிவாதியின் கணவரான

சுப்பிரமணியின் சொத்துக்களில் பொய்யாக பாகம் கேட்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு ஆதரவாக என்னுடைய பள்ளி மாற்று சான்று, என் அம்மாவின் இறப்பு சான்று, என் திருமண பத்திரிக்கை ஆகியவை பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. என் அப்பாவின் சொந்த ஊர் குந்தப்பள்ளி என்றால் சரிதான். குந்தப்பள்ளியில் ஊர்கவுண்டர் உள்ளார் என்றால் சரிதான். அவர்களை இவ்வழக்கை பொறுத்து விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் ஆம். குந்தப்பள்ளியில் இருப்பவர்களை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல, என் அப்பா புலியஞ்சேரியில் வசித்தார். புலியஞ்சேரிக்கு எப்போது வந்தார் என்றால் 30 – 40 வருடங்கள் இருக்கும். புலியஞ்சேரியில் இருக்க கூடிய ஊர்கவுண்டர் மற்றும் ஊர் பெரியவர்களை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான், அவர்களை சாட்சிகளாக விசாரிக்க உள்ளேனா என்றால் ஆம். நான் சுப்பிரமணியின் மகள் இல்லை என்பதால், இவ்வழக்கில் கோரியவாறு எனக்கு பரிகாரம் ஏதும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் அம்மா இறக்கும் போது எங்கு வசித்தார் என்றால் புலியஞ்சேரியில் வசித்தார். என் அம்மாவின் இறப்பு சான்றில் இறக்கும் போது வசிப்பிடம் அண்ணா நகர் / புலியஞ்சேரி என சொல்லப்பட்டுள்ளது என்றால் இரண்டும் ஒன்று தான். அண்ணா நகர் தனி, புலியஞ்சேரி கிராமம் தனி என்றால் தோட்டத்திற்கு சென்ற போது அண்ணா நகர் என பெயரிட்டு அழைத்தார்கள், அங்கு 10 வீடுகள் உள்ளன. நான் சொன்ன மாதிரி புலியஞ்சேரியில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA — Digitally signed by M SUMATHI SAI PRIYA

Principal District Judge,
Krishnagiri.